அ.வெ-எண் : 885

நாள் : 25.11.2009

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் வானூர்தி தொடர்பான ஏரோ ஸ்பேஸ் தொழிற் பூங்கா அமைப்பது குறித்து இன்று (25.11.2009) சிங்கப்பூர் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுடன் – மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் டாக்டர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள்.

மேலும் இன்று சிங்கப்பூர் அரசின், தொழில் மற்றும் வர்த்தகத் துறை இணை அமைச்சர் திரு.ஈஸ்வரன் அவர்களுடன், சிங்கப்பூர் அரசின் முக்கிய அதிகாரிகளுடனும், தமிழ்நாட்டில், சென்னையில் வானூர்த்தி தொழில் பூங்கா அமைப்பது குறித்தும், நிதி நகரம் சென்னையில் உருவாக்குவது குறித்தும், மேலும் கூவம் ஆற்றை சுத்தப்படுத்துவது குறித்தும் விரிவான ஆலோசனை நடத்தினார்கள்.

மேலும், மாண்புமிகு சிங்கப்பூர் அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அவர்களுடன் சென்றுள்ள மற்ற அதிகாரிகளையும் கௌரவிக்கும் வகையில், வரவேற்று விருந்து அளித்து உபசரித்தார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.